**செய்தி வெளியீடு எண்–740** **நாள்– 10.9.2008**

<u>பத்திரிகை செய்தி</u>

தமிழ் நாட்டில் பொது விநியோக திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, கோதுமை வழங்க செப்டம்பர் 2008 மாதத்திற்கு 3783 மெ. டன் வழக்கமான ஒதுக்கீடும் 2500 மெ. டன்கூடுதல் ஒதுக்கீடும் ஆக 6283 மெ. டன் கோதுமை பொது விநியோக திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு செப்டம்பர் 2008 மாதத்திற்கு மேற்சொன்ன ஒதுக்கீடு தவிர மேலும் கூடுதலாக 5000 மெ. டன் கோதுமை பொது விநியோக திட்டத்திற்கு மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 11283 மெ.டன் கோதுமை செப்டம்பர் 2008 மாதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை குடும்பஅட்டைதாரர்கள், அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கோதுமை பெறுவதில் குறைகள் இருப்பின் சென்னை துணை ஆணையர் (வடக்கு) அல்லது துணை ஆணையர் (தெற்கு) / மாவட்ட வழங்கல்அலுவலர்/ அல்லது சம்பந்தப்பட்ட உதவி ஆணையரை / வட்ட வழங்கல்அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.